

விருதுநகர் மாவட்டம், இராஜாபாளையம் வட்டம், நக்கனேரியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் நபார்டு நிதியின் கீழ் ரூ.3.76 கோடி மதிப்பில் நக்கனேரி ஊராட்சியின் வடக்கே ஆற்றின் இடையே புதிய பாலம் அமைக்கும் பணிகளுக்கு தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ராஜேந்திரன் மற்றும் சீர்மரபினர் நல வாரியத்துணை தலைவர் இராசா அருண்மொழி ஆகியோர் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார். உடன் முன்னாள் எம்.பி.தனுஷ்குமார், சேர்மன் பவித்ரா சியாம், நகரச் செயலாளர்கள் இராமமூர்த்தி, மணிகண்டன், தொகுதி பொறுப்பாளர் நாகநாதன், பொதுக் குழு உறுப்பினர் கனகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.





வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மதுரை மாவட்டம் சத்திரப்பட்டியில் மற்றும் ஊமச்சிகுளம் செட்டிகுளத்தில் மேற்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், பள்ளி நூலகங்கள் வாயிலாக மாணவர்களின் அறிவு தேடல் மற்றும் வாசிப்புத் திறன்களை மேம்படுத்துவதை தொடங்கி வைத்து பள்ளிக்கு தேவையான பொருட்கள் வழங்கி செட்டிகுளம் பகுதியில் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி தொடங்கி வைத்து மாணவர்களுக்கு நலத் திட்டங்களையும் வழங்கினார்கள். உடன் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தி.ரேணுகா , மேலூர் மாவட்ட கல்வி அலுவலர் இந்திரா ஆகியோர் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், சோமசுந்தர பாண்டியன், ஆசைக்கண்ணன், சிறைச்செல்வன், தனச்செல்வம் வீரராகவன், மற்றும் பகுதிகழகச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உடன் உள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் வட்டாரம்,விஜிலாபுரம், பெரிய குரும்பத்தெரு ஊராட்சிகளுக்கான ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாமில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் வட்டாட்சியர் சுதாகர், வட்டார வளர்ச்சி அலுவலர் துரை, ஆலங்காயம் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் வி.ஜி.அன்பு, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பூ.சதாசிவம் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களால் துவங்கப்பட்ட “உங்களுடன் ஸ்டாலின்” மகத்தான திட்டத்தினை பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி மேற்கு ஒன்றியம் தெளிச்சாத்தநல்லூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் தெளிச்சநல்லூர் பொதுவக்குடி கமுதக்குடி ஆகிய பகுதிகளுக்கு நடைபெற்ற முகாமை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், துவக்கி வைத்து பார்வையிட்டார், இந்நிகழ்வில் பரமக்குடி வட்டாட்சியர் வரதன் பரமக்குடி வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துராமலிங்கம், பரமக்குடி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் சேதுபதி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மோகன் மற்றும் மலைச்சாமி ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி ஹரிகிருஷ்ணன் கிளைக் கழகச் செயலாளர்கள் கணேசன், ரவி, ராஜுவ் மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.






கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் சிவகங்கை முதல் பழனி வரை (வழி : திருப்பத்தூர்) வழிதடத்திற்கான புதிய புறநகர் பேருந்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் திருமதி கோகிலாராணி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக துணை மேலளார் (வணிகம்) நாகராஜன், கிளை மேலாளர் இளங்கோ, திருப்பத்தூர் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சண்முகவடிவேல், பேரூராட்சி வார்டு உறுப்பினர் திருமதி ராஜேஸ்வரி சேகர் மற்றும் போக்குவரத்துத்துறையை சார்ந்த அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் உள்ளனர்.



மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட வடக்கு மாசி வீதி, மேலமாசி வீதி என பல்வேறு பகுதிகளுக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சருமான பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் வீதி வீதியாகச் சென்று பொதுமக்களை சந்தித்து அவர்தம் குறைகளை கேட்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகளை அறிவுறுத்தினார். இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.



சுதந்திரப் போராட்ட மாவீரன் பூலித்தேவன் அவர்களின் ஜெயந்தி விழாவை முன்னிட்டு,நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மத்திய மாவட்ட அலுவலகத்தில்,அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் முருகன் தலைமையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில்,மாநில மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் விஜிலா சத்யானந்த் நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ்,மாநகர துணைச் செயலாளர் சுதா மூர்த்தி, பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம், துபாய் சாகுல்,டாக்டர்.சங்கர்,சங்கர், மண்டல தலைவர்கள் பிரான்சிஸ், மகேஸ்வரி,கதீஜா இக்லாம் பாசிலா, மற்றும் உஸ்மான்,ஆவின் கல்யாண சுந்தரம்,அலி ஷேக் மன்சூர்,காஜா முஹைதீன்,முருக்கு சாகுல் ஹமீது, ஜெயின் உசேன்,இசக்கி, சாலி மௌலானா,மாரிமுத்து, அருள் சுந்தர்ராஜ், முத்துராமன்,கந்தன், பேச்சியம்மாள்,சின்னதாய் கிருஷ்ணன்,சபி அமீர் பாத்து,வில்சன் மணித்துரை,பீனிக்ஸ் அந்தோணி, ராஜேந்திரன்,சுண்ணாம்பு மணி, வேலு ஆறுமுகம், பாதுஷா,ரகுமான் ஷா,மகேஷ் ஆதித்தன்,சாமுவேல்,ரபீக் அஹமது,நேசம் ராஜா,நெல்லை முத்தையா,மில். ஜே. குமார், சௌந்தரம் முத்துராஜ்,தேவிகா, பூங்கனி,அருணா,பவானி, கிருஷ்ணன்,வினோத்,ஆவின் பாலாஜி,இசக்கி சுப்பையா, பிரேம்குமார் உள்பட கழக நிர்வாகிகள் உடன்பிறப்புகள் திரளாக அனைவரும் கலந்து கொண்டனர்.




சுதந்திரப் போராட்ட மாவீரன் பூலித்தேவன் அவர்களின் ஜெயந்தி விழாவை முன்னிட்டு நெல்லை மேற்கு மாநகர தி.மு.க சார்பில் மாநகர அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப்படத்திற்கு மாநகர மேற்கு பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் நெல்லை பேட்டை கிழக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான்,மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ்,வட்ட செயலாளர்கள் கேபிள் குமரேசன், லெனின் மற்றும் முத்து, மகாராஜன், செந்தில்குமார்,ஷெட்டி,மைக் மணி, சிவக்குமார், மணிகண்டன், சுடலைகண், மஸ்தான், சங்கர், கார்த்திக் கிருஷ்ணகுமார், முருகன், ராஜேஸ்வரி, ஜோதி பிரியா, வெங்கடேஷ், ராமச்சந்திரன், விநாயகம், வேல் ஆறுமுகம், சபரிமலை வாசன், இசக்கி அய்யப்பன், ஆறுமுகம், சுத்தமல்லி ராஜ்குமார், வேலாயுதம், வானுமாமலை, சந்துரு, சங்கர், உலகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், வீரபாண்டியபுரம் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.7லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர் தங்கவேல், விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் அன்புராஜன், இம்மானுவேல், உட்பட கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.